## திராவிட இயக்க இதழ்கள் - 'சிந்தனையாளன்'



பெரியாரிய அறிஞர் வே.ஆனை முத்து அவர்களால் 1974 ஆகஸ்ட் 17 அன்று தொடங்கப்பட்ட இதழ் 'சிந்தனையாளன்'. இது திருச்சி யிலிருந்து வார ஏடாக வெளிவந்தது. இந்த இதழை அச்சிட்டு வெளியிடு வதற்காகவே 'பாவேந்தர் அச்சகம்' என்ற அச்சகத்தையும் ஆனைமுத்து தொடங்கினார்.

1982-ஆம் ஆண்டு முதல் 'சிந்தனையாளன்' இதழ் சென்னையி லிருந்து வெளியிடப்பட்டு வருகிறது. அதற்காக 'பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்' தொடங்கப்பட்டது.

முதலில் வார இதழாகவும், பின் மாதம் இருமுறை இதழாகவும், அதன் பின் மாத இதழாகவும் இது மாற்றம் கண்டது. பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமத்துக்கு ஏற்பட்ட இழப்பின் காரணமாக இந்த இதழை கட்சி ஏடாக வெளியிட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1988-ஆம் ஆண்டு வரை பெரியார் சமஉரிமைக் கழகத்தின் மாத இதழாக வெளிவந்தது.

பிறகு அந்தக் கட்சியின் பெயர் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என்று மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, 1988-ஆம் ஆண்டு மார்ச் 13 முதல் அந்தக் கட்சியின் இதழாக வெளிவருகிறது.

2018-இல் இந்த இதழின் வெளியீட்டு உரிமையைத் தனது கட்சிக்கே ஓர் உறுதிமொழி ஆவணம் வாயிலாக எழுதிக் கொடுத்துவிட்டார்.

பெரியார் கருத்துகளை முதன்மைப்படுத்தி, சமகால அரசியல் நிகழ்வுகளை அலசும் கட்டுரைகளுக்கு இந்த இதழ் அதிக முக்கியத்துவம் கொடுத்தது. முகப்பு அட்டையில் ஆளுமைகளின் படங்களும் ஓவியங்களும் இடம்பிடித்தன. ஒவ்வோர் ஆண்டும் 'பெரியார் பிறந்த நாள்', 'மே தினம்', 'அம்பேத்கர் பிறந்த நாள்' என சிறப்பு நாட்களுக்குச் சிறப்பிதழ்களை வெளியிடுவதை, இது வழக்கமாகக் கொண்டிருந்தது. இந்த இதழ் இன்றும் தொடர்ந்து வெளிவருகிறது.

## ::ப்ளாஷ்பேக்





எ.கே.எம்.கீர்த்தி

### கலைஞர் விருது, கலைஞர் கரங்களால்...

2005-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று நெல்லையில், தி.மு.கழகத்தின் முப்பெரும் விழா நடைபெற்றது. 1952-ஆம் ஆண்டு முதல் கழகப் பணியாற்றி வந்த என்னுடைய தாத்தா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கருப்பையா அவர்களுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் பெயரிலான விருது அறிவிக்கப்பட்டது. இவ்விழாவில், தலைவர் கலைஞர் அவர்கள் என் தாத்தாவுக்கு அவர் பெயரிலான விருது வழங்கி, சிறப்பித்தார்கள். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

- எ.கே.எம்.கீர்த்தி, மானூர் ஒன்றியம்,
திருநெல்வேலி மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாநில சுயாட்சி, நீதிக்கட்சித் தீர்மானம்!

1926-ஆம் ஆண்டு நடைபெற்றத் தேர்தலில் சீனிவாச அய்யங்கார் தலைமையில், 'சுயாட்சிக் கட்சி' என்ற பெயரில் நீதிக்கட்சியை காங்கிரஸ் கட்சி எதிர்த்து நின்றது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றது. ஆனால், பிறர் உதவியில் நீதிக்கட்சி அமைச்சரவை அமைக்கலாம் என்கிற யோசனையை, பனகல் அரசர் மறுத்துவிட்டார். அப்போது, மாநிலத்துக்கு முழு சுயாட்சி அளிக்க வேண்டும் என்று, ஆங்கிலேய அரசை வற்புறுத்தி, பனகல்அரசர் தலைமையில் நீதிக்கட்சி, தீர்மானம் நிறைவேற்றியது.

# மாநாடு

ர.பிரகாசு 35

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்




## கல்லக்குடிக்கு இலால்குடியில் விதை!

"முன்னேற்றக் கழகத்தை மூட்டைப் பூச்சியைப் போல நசுக்கிவிடுவேன்" என்று முழக்கமிட்ட, ராஜாஜி போன்றோருக்கு, 'கழகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கவே முடியாது' என்று உணர்த்திய சம்பவம் மும்முனைப் போராட்டம்.

டால்மியாபுரம் புகைவண்டி நிலையத்தின் பெயரை 'கல்லக்குடி' என தமிழில் மாற்ற போர்க்களம் புகுந்ததே, மும்முனைப் போராட்டத்தின் மூன்றாவது முனை. அந்தப் போராட்டத்திற்கான முதல் விதை தூவப்பட்டது, 1953-ஆம் ஆண்டு இலால்குடியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட இரண்டாவது மாநாட்டில்.

ஏப்ரல் 25, 26 ஆகிய இரண்டு நாட்கள் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் அ.பொன்னம்பலனார் தலைமையில், நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டை இராமாமிர்தத்தம்மையார் திறந்துவைத்தார். ஜாதியற்ற சமுதாயம் அமைப்பதற்கான நோக்கத்தை விவரித்த பொன்னம்பலனார், காதல் திருமணம், ஜாதி மறுப்புத் திருமணம், விதவை மணம் செய்து கொண்டோரின் நீண்ட பட்டியலை வாசித்தார். இத்தகைய புரட்சிகரத் திருமணங்கள் கழகத்திடம் இருந்து கடைக் கோடிக்கும் கடத்தப்பட்டு வருவதை எண்ணி, அக மகிழ்ந்தார்.

வரவேற்புரையாற்றிய அன்பில் தர்மலிங்கம், "கடவுளும், மதமுமே நமது சமுதாயத்தில் நிலவி நின்று வரும், ஆண்டான் அடிமை, ஏழை - பணக்காரன், ஜாதியில் உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பேதங்களுக்கு மூலக் காரணங்கள்" என்றுகூறி சமூகச் சீர்திருத்த மாநாட்டுக்கான நோக்கத்தை எழுச்சிபொங்க பேசினார். பேராசிரியர் க.அன்பழகன், என்.வி.நடராசன் போன்ற முன்னணிப் பேச்சாளர்களின் சீர்திருத்தச் சிந்தனைகளும் மாநாட்டில் அடைமழையாகப் பொழிந்தன. திருச்சி மாவட்ட இரண்டாவது மாநாட்டுக்கு, மற்றொரு சிறப்பும் உண்டு. எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட முதல் தி.மு.க. மாநாடு இதுதான். நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் கலந்துகொண்டார். மாநாட்டில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி கலைக்கண்காட்சியைத் திறந்து வைத்தார். பட்டிவீரன்பட்டி சௌந்திரபாண்டியனார் வாழ்க்கையை, வில்லுப்பாட்டின் மூலம் எடுத்துரைத்தார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்வில் தனிப்பெரும் தடயங்கள் பதித்துவிடக் காரணமாக இருந்த அறிவிப்பொன்றை, இரண்டாவது நாளில் தீர்மானமாக வெளியிட்டார் பேரறிஞர் அண்ணா. "தென்னாட்டு வளங்களில் ஒன்றான சிமெண்டை தனது வளத்துக்காகப் பயன்படுத்தி, சுரண்டி வாழும் வடநாட்டு டால்மியாவானவர், சிமெண்ட் விளையும் இடமான கல்லக்குடிக்கு வடநாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாக 'டால்மியாபுரம்' என்ற பெயரை வைத்திருப்பது, திராவிட மக்களை அவமானம் செய்வதாகும். அந்தப் பெயரை நீக்கிவிட்டு, 'கல்லக்குடி' என்பதை வைத்தல் வேண்டுமெனக் கிளர்ச்சி தொடங்கப்படும்" என்றார்.

அந்த மாபெரும் கிளர்ச்சிக்குத் தலைவராகக் கலைஞர் நியமிக்கப்பட்டார். "டால்மியாபுரம் - இந்தப் பெயர் என்னைச் சுட்டு எரிக்கிறது. இரயில்வே நிலையத்தைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம் அங்கே எழுதப்பட்டிருக்கும் இந்தப் பெயர், என் உள்ளத்தைக் கொதிப்படையச் செய்கிறது.

செந்தமிழ் நாட்டில், வந்தவன் பெயரா? சுரண்டிக் கொழுப்பவன் பெயரால் ஓர் இடமா? கூடாது; கூடாது. இந்தப் பெயரை மாற்றி அமைப்போம், மாற்றி அமைத்தே தீருவோம். பொதுச்செயலாளரை (அண்ணா) இதயத்தில் ஏந்தி, களம் நோக்கிச் செல்லப் புறப்பட்டுவிட்டேன்" என்று சூளுரைத்தார் கலைஞர்.

அண்ணா எண்ணியதையே முடிப்பவர், கட்டளையைக் கண்டுகொள்ளாமல் விடுவாரா? 1953- ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாள் குறிக்கப்பட்டு, டால்மியாபுரம் தண்டவாளத்தில் தலைவைத்தார் கலைஞர். 1969-இல் தமிழ்நாட்டின் தலைமகனானபோது 'கல்லக்குடி' கண்டார்.

**செந்தமிழ் நாட்டில், வந்தவன் பெயரா? சுரண்டிக் கொழுப்பவன் பெயரால் ஓர் இடமா? கூடாது; கூடாது. இந்தப் பெயரை மாற்றி அமைப்போம்!**

...கூட்டம் திரளும்

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 35

"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

## கட்டமைக்கப்படும் பிம்பங்கள்!




தமிழ்நாட்டு அரசியலில் சினிமாவும்-அரசியலும் பிரிக்கமுடியாதவை. நடிகர் என்பதாலேயே அரசியலில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியவர், எம்.ஜி.ஆர். இதனால் அவரைப் போல, அரசியலிலும் ஜொலிக்க வேண்டும் என்ற கனவு, நம்ம ஊர் திரை நாயகர்களுக்கு ஏற்படுகிறது.

திரை நாயகனிலிருந்து அரசியல் நாயகனாக அவதாரம் எடுத்த எம்.ஜி. ஆர் என்கிற பிம்பம் என்ன? அந்த பிம்பம் எப்படிக் கட்டமைக்கப்பட்டது? அது எளிய மக்களில் தொடங்கி, உயர் வகுப்பு மக்கள் வரை வரவேற்பைப் பெற்றது எப்படி? சினிமாவிலும் நிஜ வாழ்க்கையிலும் அவர் ஒரே நபரா? அந்த பிம்பம் உருவாகக் காரணமாக இருந்தவை எவை? அவரின் சினிமா பிம்பம் தமிழ்க் கலாசாரச் சூழலோடு எப்படி ஒன்றிப் போனது? அதற்கு அவர் மேற்கொண்ட மெனக்கெடல்கள், முன் முயற்சிகள் என்ன? என்பவற்றை விரிவாகப் பேசுகிறது, ஆய்வறிஞர் எம்.எஸ்.எஸ் பாண்டியன் எழுதிய 'பிம்பச் சிறை' என்னும் இந்த நூல். பிரக்ஞை பதிப்பகம் இந்நூலைத் தமிழில் வெளியிட்டுள்ளது.

சுதந்திர இந்தியாவில், அதிக திரையரங்குகளைக் கொண்ட மாநிலங்களில் ஆந்திராவுக்கு அடுத்த இடத்தில் தமிழ்நாடு இருந்தது. இங்கு திராவிட இயக்கச் செயல்பாடுகளால் திரை அரங்குகளில் அனைத்து மக்களும், சாதி-மத வேறுபாடின்றி, தங்களின் வாங்கும் சக்திக்கேற்ப அமர்ந்து ரசிக்கும் வகையில் ஜனநாயக வெளியாக உருப்பெற்றிருந்தன.

திராவிட இயக்கம் இதனைப் பயன்படுத்திக் கொண்டு கொள்கைப் பிரச்சாரங்களை சினிமா, நாடகம், இலக்கியம் போன்ற எல்லாத் தளங்களிலும் மேற்கொண்டது.

தொடக்கத்தில் காங்கிரஸ்காரரான அவர், 1953-இல் தான் தி.மு.க.வில் இணைகிறார், அவரின் திரைப்படங்கள் எல்லாம், கழகத்திற்குக் கொள்கைப் பிரச்சார ஊடகமாகப் பயன்பட்டன. மக்களும் அதை வரவேற்றார்கள், இயக்கம் வளர்ந்தது அதைப் பயன்படுத்திக் கொண்டு அவரும் வளர்ந்தார்.

எம்.ஜி.ஆரின் திரை பிம்பக் கட்டமைப்பில், ஏற்கனவே தமிழ்ப் பண்பாட்டில் ஊறிப் போன சில பொது அபிப்பிராய அம்சங்கள் பயன்படுத்தப்பட்டன, 1.நீதிமானாக இருப்பது 2.கல்வியை முதன்மையாகக் கருதுவது 3.பெண்களை மதிப்பது. இப்பண்புகள் எல்லாம் எளிய மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன. அதற்கேற்ப, அவரின் கதாபாத்திரம் எல்லாம் தன்னை பெரும்பாலும் எளியவனாகவும், இந்த மூன்று பண்புகளைக் கொண்டவனாகவும், எளிய உடையிலும் காட்சி அளிக்கும் வகையிலும் அமைத்துக் கொண்டார். அதனால், மக்கள் தங்களுக்குள் ஒருவனாகத்தான் அவரைப் பார்க்கத் தொடங்கினர். பாடல்கள், வசனங்கள், சண்டைக் காட்சிகள் என எல்லாமும் அவரது தனிப்பட்ட தணிக்கைக்குப் பிறகே காட்சியாக வைக்கப்பட்டன.

இப்படியான செயல் திட்டங்களால், பொது வாழ்க்கைப் பண்பாடுகளுக்கு நெருக்கமாக அவரது திரை வாழ்க்கை கட்டமைக்கப்பட்டது.

பொது வாழ்க்கைப் பண்பாட்டுக்கும், நிஜ வாழ்க்கைக்கும் இடையில், மிகப்பெரிய இடைவெளி இருந்தாலும் அவரின் பிம்பம் மக்களிடம் திரைப் பிம்பமாக மட்டுமே பதியப்பட்டது. இந்த முரணை மிக ஆழமாகவே விவாதிக்கிறது பிம்பச் சிறை.


திரைக்கும் நிஜத்திற்கும் தொடர்பற்ற பல எம்.ஜி.ஆர்கள் காத்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் ஒரு 'பிம்பச் சிறையில்' அடைபடாமல் மீள இந்நூல் அவசியம் பயன்படும்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

644

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.